செய்தி வெளியீடு எண்.202 நாள்.21.3.2018

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழா – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பங்கேற்பு**

சென்னை கலைவாணர் அரங்கில் 23.3.2018 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழா மிகச்சிறப்புடன் நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் தலைமை ஏற்பார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஓராண்டு சாதனை சிறப்பு மலர், சாதனை விளக்கப் படங்கள், குறும்பாடல்கள், புகைப்படத் தொகுப்பு, முதலமைச்சரின் உரைகள் மற்றும் பொன்மொழிகள் அடங்கிய தொகுப்பினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றுவார்கள். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலை வகிப்பார்கள்.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள். மேலும், இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி புதுடெல்லி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றுவார்கள். அரசு செயலர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றுவார்கள்.

பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, பள்ளிக் கல்வித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, எரிசக்தித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, உயர்கல்வித் துறை, தொழில் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மைத் துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் கடந்த ஓராண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், சாதனைகள், வளர்ச்சிப் பணிகள், வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் குறித்து பொதுமக்கள் பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் சாதனை விளக்க கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைப்பார்கள். இக்கண்காட்சி பொதுமக்களின் பயன் கருதி ஒரு வார காலத்திற்கு இருக்கும். பொதுமக்கள் இக்கண்காட்சியினை கண்டுகளிப்பதோடு, அரசின் திட்டங்களைத் தெரிந்து பயன்பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்து வருகிறது.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.**